Tnpsc Tamil Current Affairs September 2016

Thanks To

1. Tnpsc Current Affairs

2. www.winmeen.com [Tamil Current Affairs Online Test]

3. Current Affairs for Competitive Exams

1] ஜம்மு & காஷ்மீரில் Saser La மற்றும் லடாக் இடையே சுமார் 10,500 ஆண்டுகளுக்கு முன்பு (கி.மு. 8500) கடல் மட்டத்திற்கு மேலே 14,000 அடி உயரத்தில் மனிதர்கள் இருந்ததற்கான படிவங்களை இந்திய தொல்லியல் துறையினர் கண்டறிந்துள்ளனர்.

2] The Orphanage For Words

எழுதியவர். ---- Shinie Antony

3] 7th Mountain Echoes Literary Festival -- 2016 At Thimpu (Bhutan)

- ஆகஸ்ட் 26 முதல் 28 வரை பூடானின் திம்பு நகரில் ராஜஸ்தான் மாநில சுற்றுலா துறை , Siyahi அமைப்பு , இந்தியா - பூடான் பவுண்டேசன் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த இலக்கியம் மற்றும் கலாச்சார திருவிழா 7th Mountain Echoes Literary Festival -- 2016 நடைபெற்று முடிந்துள்ளது.

4] மும்பையில் அமைந்துள்ள Homi Bhabha National Institute (HBNI)ன் துணை வேந்தராக பிரபல விஞ்ஞானி P.D. குப்தா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

5] கூகுள் நிறுவனம் ஆண்ட்ராய்ட் மற்றும் iOS தொழில்நுட்பத்தில் இயங்ககூடிய Video Calling app - DUO வை அறிமுகம் செய்துள்ளது.

6] comprehensive Crime Criminal Tracking Network System (CCTNS)

- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மகாராஷ்டிரா , ஒருங்கிணைந்த குற்றம், குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

7] இந்தியாவிலேயே முதன் முறையாக Million Lights என்ற TV சேனல் , உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டத்தை DEN Manoranjan Satellite உடன் இணைந்து புனே நகரில் துவக்கியுள்ளது.

- Microsoft நிறுவனம் இதற்கான தொழில்நுட்ப உதவிகளை அளித்துள்ளது.

8] மத்திய அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்துக்கான விழிப்புணர்வு பிரசாரத்துக்கான தூதராக, சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த 7 வயது மலையேற்ற வீராங்கனை எட்வினா நியமிக்கப்பட்டுள்ளார்.

- எட்வினா இதுவரை, சத்தீஸ்கரில் உள்ள, 54 மலைச்சிகரங்களில் வெற்றிகரமாக ஏறி, சாதித்துள்ளார். தற்போது, ராஜஸ்தான் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் உள்ள, 76 மலைச்சிகரங்களில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

9] தமிழக கடல் வழியாக பயங்கரவாதிகள், கடத்தல்காரர்கள் ஊடுருவலை தடுக்கும் விதமாக , வங்கக்கடல், பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் ஆகஸ்ட் 29 அன்று இந்திய கடலோர காவல் படையினர் , தமிழக கடலோர காவல் படையினர், சுங்கத் துறையினர் இணைந்து ஆப்பரேஷன் சஷாக்' என்ற கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

10] ஐ.நா., பெண்கள் அமைப்பின் நல்லெண்ண தூதராக, { United Nations Women's Advocate for Gender Equality and Women's Empowerment in India. } ரஜினியின் மகளும், நடிகர் தனுசின் மனைவியுமான ஐஸ்வர்யா தனுஷ் நியமிக்கப்பட்டு உள்ளார்.

- இந்தியாவில், பாலின சமன்பாடு, பெண்கள் முன்னேற்றம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவது இவரது முக்கிய பணி ஆகும்.

- இதற்கு முன், 2014ல், டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா; 2015ல், பாலிவுட் இயக்குனர் பர்கான் அக்தர் உள்ளிட்டோர், இந்த பொறுப்பை வகித்துள்ளனர்.

11] குறைந்த செலவில் ராக்கெட்டை செலுத்த உதவும் 'ஸ்கிராம்ஜெட்' இன்ஜினை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆகஸ்ட் 29ல் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்து புதிய சாதனை படைத்துள்ளது.

- ஸ்கிராம்ஜெட் என்ஜின்
  ~~~~~~~~~~~~~~~~~~
- பொதுவாக ராக்கெட்களை விண்ணில் செலுத்தும்போது அவற்றின் எரிபொருளை எரிப்பதற்கு தேவையான ஆக்சிஜன் கொள்கலனையும் சுமந்து செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு ஆக்சிஜனை சுமந்து செல்வதால் புவியின் வளிமண்டலத்தை தாண்டியும் ராக்கெட்டால் பயணிக்க முடியும். ஆனால், ஆக்சிஜன் கொள்கலத்தை சுமந்து செல்வதால் ராக்கெட்டின் எடை அதிகரிக்கிறது.

- இதை தவிர்க்க, வளிமண்டலத்தில் உள்ள ஆக்சிஜனையே எரிபொருளை எரிக்கப் பயன்படுத்தினால் அதிக எடை கொண்ட ஆக்சிஜன் கொள்கலனை சுமந்து செல்லும் தேவை இருக்காது. இதற்காகவே வளிமண்டல ஆக்சிஜனை உறிஞ்சி எரிபொருளை எரிக்கும் தொழில்நுட்பம், 'ஸ்கிராம்ஜெட்' இன்ஜின் ' (Scramjet Engine) பயன்படுத்தப்படுகிறது.

- அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவை ஸ்கிராம்ஜெட் இன்ஜின் கொண்ட ராக்கெட்டை விண்ணில் செலுத்தி சோதனை செய்துள்ளன. அந்த வரிசையில் தற்போது இந்தியாவின் இஸ்ரோவும் இணைந்துள்ளது.

- இந்த சோதனைக்காக 2 ஸ்கிராம்ஜெட் இன்ஜின்கள், 3,277 கிலோ எடை கொண்ட RH - 560 என்ற ராக்கெட்டில் பொருத்தப்பட்டு, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஏவப்பட்டது. ராக்கெட் ஏவப்பட்ட 50-வது விநாடியில் இந்தச் சோதனை வெற்றி அடைந்தது.
  ~~~~~~~~~~~~~~~~~~

- சோதனை முயற்சியில் ராக்கெட், வளிமண்டலத்தில் 70 கி.மீ. தூரம் செலுத்தப்பட்டு, பின்னர் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 320 கி.மீ. தொலைவில் வங்கக் கடலில் திட்டமிட்டபடி விழுந்தது.

பயன்கள்

~~~~~~~~

- ஸ்கிராம்ஜெட் இன்ஜினை பயன்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன. உதாரணமாக, 400 டன் எடை கொண்ட ஜிஎஸ்எல்வி ராக்கெட்டில் 85 சதவீத எடை, எரிபொருளாகத்தான் இருக்கும். அதிலும், 70 சதவீதம் ஆக்சிஜன் கொள்கலனின் எடையாகும். எனவே, அந்த எடையைக் குறைக்கும் விதமாக வளிமண்டல ஆக்சிஜனை உறிஞ்சி எரிபொருளை எரிக்கும் தொழில்நுட்பத்தை ஸ்கிராம்ஜெட் இன்ஜின் கொண்டுள்ளது.

- இதன்மூலம், ஆக்சிஜன் கொள் கலனின் எடை குறைவதோடு, அதிக எடை கொண்ட செயற்கைக் கோள்களை ராக்கெட்கள் மூலம் செலுத்த இயலும். மேலும், ராக்கெட்டை ஏவும் செலவும் பெருமளவில் குறையும். அதுமட்டுமின்றி, மறு பயன்பாட்டு விண்கலம் உருவாக்கத்துக்கும் ஸ்கிராம்ஜெட் இன்ஜின் சோதனை பெரும் உதவியாக இருக்கும்.

- ஸ்கிராம்ஜெட் இன்ஜினை 'ஸ்பேஸ் பிளேன்' (Space Plane) எனப்படும் அதிவேக விமானங்களில் பயன்படுத்தும் போது ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்கு சில மணி நேரங்களில் பயணம் மேற்கொள்ள முடியும். இதன்மூலம், பயண நேரம் குறையும்.

12] யுத்த மோதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த , இலங்கை வடமாகாணத்தின் முக்கிய உப்பளமாகிய ஆனையிறவு உப்பளத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக ஆகஸ்ட் 29ல் உப்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

- 30 ஆண்டுகளுக்கு முன் சுமார் ஐம்பதாயிரம் மெட்ரிக் டன் உப்பு இங்கு உற்பத்தி செய்யப்பட்டதாகவும், இப்போது எட்டாயிரம் மெட்ரிக் டன்
~~~~~~~~

அளவிலேயே ஆரம்ப நிலையில் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

13] பிரேசிலில் ஒலிம்பிக் போட்டிகளின் போது 560 அடி அகலம் கொண்ட சுவரில் வரையப்பட்ட " எட்னியாஸ் " ஓவியம் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

- ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள ஒலிம்பிக் நெடுஞ்சாலையில் உள்ள கைவிடப்பட்ட நிலையில் உள்ள ஒரு கிடங்கின் சுவர் மீது வரையப்பட்டது.

- இந்த ஓவியத்தை வரைய பிரேசில் நாட்டைச் சேர்ந்த எடுவர்டோ கோப்ரா தலைமையிலான குழுவினர் 45 நாட்கள் எடுத்துக்கொண்டனர்.

- ஒலிம்பிக் சின்னத்தில் உள்ள 5 வளையங்களைக் குறிக்கும் வகையில், பல்வேறு கண்டங்களைச் சேர்ந்த 5 பழங்குடியின மக்களின் முகங்களை பிரதிபலிக்கும் வகையில் தெளிப்பு பெயின்ட் (ஸ்பிரே பெயின்ட்) மூலம் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.

- குறிப்பாக, நியூகினியாவின் ஹுலி, எத்தியோப்பியாவின் முர்சி, தாய்லாந்தின் கயின், ஐரோப்பிய யூனியனின் சுபி மற்றும் அமெரிக்காவின் தபஜோஸ் ஆகிய 5 இனத்தவர்களின் ஓவியம்தான் சுவரில் வரையப்பட்டுள்ளன.

- 51 அடி உயரம் 560 அடி அகலம் கொண்ட சுவரில் வரையப்பட்டுள்ள இந்த ஓவியம் 3 கி.மீ. தூரம் வரை நீள்கிறது. இந்த ஓவியத்தை வரைய, 180 பக்கெட் அக்ரிலிக் பெயின்ட், 2,800 ஸ்பிரே பெயின்ட் கேன்கள் மற்றும் 7 ஹைட்ராலிக் லிப்ட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

14] பிரான்ஸ் நாட்டின் கடற்கரையில் முஸ்லிம் பெண்களால் அணியப்படும் " புர்கினி " ஆடை அணிந்து கடலில் இறங்கக் கூடாது என பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்ததை அந்நாட்டு நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

15] மியான்மர் அதிபர் யு ஹ்தின் கியாவ் முதன் முறையாக இந்தியா வந்துள்ளார்.

- இருதரப்பிலும் தகவல் தொடர்பு, மருத்துவம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேளாண்மை, வங்கி, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.

- இந்தியா - மியான்மர் - தாய்லாந்து முத்தரப்பு நெடுஞ்சாலைத் திட்டத்தில் கலேவா - யார்கி இடையே 69 பாலங்களைக் கட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- { மியான்மர் , வடகிழக்கு மாநிலங்களுடன் 1,640 கி.மீ. எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது.}

16] தேசிய ஜவுளி கழகத்திற்கு சொந்தமான இந்து - 6 மில்லின் 12 ஏக்கர் நிலத்தை , அம்பேத்கர் நினைவரங்கம் கட்டுவதற்காக , மகாராஷ்டிரா அரசு வசம் வழங்க மத்திய கேபினட் கமிட்டி அனுமதி வழங்கியுள்ளது.

17] முதலாவது கலை மற்றும் விலங்குகள் திரைப்படவிழா " Animal - Human - Nature Continuum " ஜூலை 01 முதல் ஆகஸ்ட் 28 வரை மும்பையில் நடைபெற்றுள்ளது.

18] செப்டம்பர் 14 முதல் 16 வரை விசாகப்பட்டினத்தில் 3rd BRICS Urbananisation Forum Meeting -- 2016 நடைபெறவுள்ளது.

19] மத்திய பிரதேசம், இந்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள " Mhow " ரயில் நிலையத்தின் பெயரை " B.R. அம்பேத்கர் " ரயில் நிலையம் என பெயர் மாற்றம் செய்திட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- ஏற்கனவே 2003லேயே Mhow என்னும் இந்த ஊரின் பெயர் டாக்டர். அம்பேத்கர் நகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

20] பேரிடர் அழிவு குறைப்பு திட்ட செயலாக்கத்தை உருவாக்க பீகார் மாநில அரசு , பாங்காங்கை தலைமையிடமாக கொண்ட Asian Disaster Preparedness Centre (ADPC) என்ற அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

21] மத்திய ரிசர்வ் போலிஸ் படையின் (CRPF) நல்லெண்ண தூதரகவும், கவுரவ கமாண்டண்ட் ஆகவும் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற P.V. சிந்து நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- CRPF கமாண்டண்ட் என்பது உள்நாட்டு காவல்பணியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (S.P.) பதவிக்கு இணையானது.

- CRPF கமாண்டண்ட்க்கு கீழே 1000 காவலர்கள் பணிபுரிவர்.

- தற்போது CRPFன் Director General. --- K.துர்கா பிரசாத்

22] தமிழக கவர்னராக பணியாற்றிவந்த K. ரோசய்யாவின் 5 ஆண்டு கால பதவிக்காலம் நிறைவு பெற்றதால் , தமிழக கவர்னர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

- மகாராஷ்டிரா மாநில ஆளுநர் C. வித்யாசாகர் ராவ் தமிழக ஆளுநர் பொறுப்பை கூடுதலாக கவனிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

23] இந்தியாவிலே முதன் முதலாக UJALA திட்டத்தின் கீழ் 2 கோடி LED பல்புகளை (92 நாட்களுக்குள்) குஜராத் மாநில அரசு விநியோகம் செய்துள்ளது.

24] தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின்படி , 2015 - 16ல் நாட்டிலேயே அதிக அளவு கற்பழிப்பு வழக்குகள் பதிவான மாநிலங்களில் மத்தியபிரதேசம் முதலிடம் வகிக்கிறது.

- யூனியன் பிரதேசங்களில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.

- பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த பாலியல் வன்முறைகள் அதிகம் நடைபெற்ற மாநிலமாக மகாராஷ்டிரா உள்ளது.

25] பயிற்சி பெறாத , பண்ணை சாராத தொழிலாளர்களின் குறைந்த பட்ச தினக்கூலியை ரூ.246 லிருந்து ரூ. 350 ஆக உயர்த்தி வழங்க மத்திய தொழிலாளர் நலத்துறை ஒப்புதல் அளித்துள்ளது.

* (தொழிற்சங்கங்கள் குறைந்த பட்ச கூலியை ரூ. 692 ஆக உயர்த்த கோரின.)

26] குஜராத் மாநிலத்தில் வறட்சியான சவுராஷ்டிர பகுதிக்கு, நர்மதா நதி நீர் மூலம் பாசன வசதி பெறும் வகையில் ரூ.12,000 கோடி மதிப்பிலான " சவுராஷ்டிரா நர்மதா அவ்தாரன் பாசனம் (சவுனி) " { SAUNI -- Saurastra Narmada Avataran Irrigation } திட்டத்தின் முதல் பகுதியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்துதுள்ளார்.

- சர்தார் சரோவர் அணையிலிருந்து உபரியாக வெளியேறும் நீரை 115 அணைகளில் நிரப்பி, சவுராஷ்டிராவின் 11 வறண்ட மாவட்டங்களுக்கு கால்வாய்கள் மற்றும் குழாய்கள் மூலம் கொண்டு செல்வதுதான் சவுனி திட்டம். இத்திட்டத்தின் முதல் அலகு மூலம் 4.13 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

- சன்சோரா பகுதியில் நடைபெற்ற திட்ட தொடக்கவிழாவில், அஜி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அஜி - 3 அணையிலிருந்து அஜி - 4 அணைக்கு தண்ணீரை பிரதமர் மோடி திறந்து விட்டார். தவரி, யுயுண்ட்- 4 நீர்த்தேக்கத்துக்கும் இங்கிருந்து தண்ணீர் ஏற்றப்படுகிறது.

27] பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுலாத்துறை மாநாடு (BRICS Convention on Tourism), மத்திய பிரதேசத்தில் கஜுராஹோவில் , செப்டம்பர் 01 மற்றும் 02ல் நடைபெறவுள்ளது.

28] Broadcasting Content Complaints Council (BCCC) என்ற அமைப்பின் உறுப்பினர்களாக பிரபல ஹிந்தி நடிகை சர்மிளா தாகூர், கன்னட நடிகை அருந்ததி நாக், மற்றும் பேராசிரியர் திருமதி இரா பாஸ்கர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

29] Glory Foundation என்னும் அமைப்பு முதன்முறையாக ராணுவ பாரம்பரியதை பறைசாற்றும் வலைத்தளத்தை உருவாக்கியுள்ளது.

- அதன் பெயர் --- Colours of Glory.

- Glory Foundation அமைப்பு 1971 இந்தியா - பாகிஸ்தான் போரில் பங்குகொண்ட ராணுவ வீரர் D.P.ராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது.

30] ஆகஸ்ட் 29 , 30 & 31 ஆகிய தேதிகளில் புது டெல்லியில் சார்நாடுகளின் புள்ளியில் துறையின் தலைமை பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட 8th Meeting of Heads of SAARC Statistical Organizations (SAARCSTAT) மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது.

- மாநாட்டின் கருப்பொருள் ---- Trade Statistics - Merchandise & Services.

31] 6th edition of Tokyo International Conference on African Development (TICAD) 2016 ., கென்யாவின் நைரோபியில் ஆகஸ்ட் 27 & 28 ல் நடைபெற்று முடிந்துள்ளது.

32] அஸ்ஸாமை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் Dr. Bibhuti Lahkar , International Union for Conservation of Nature (IUCN) வழங்கும் பெருமைமிகு Heritage Heroes Award -

2016க்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். இந்த விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள முதல் ஆசியர் இவரே.

33] மகேந்திரா & மகேந்திரா நிறுவனம் தமது தயாரிப்பில் உள்ள டிராக்டர், கட்டுமான இயந்திரங்கள் , லாரி மற்றும் அனைத்து விதமான வாகனங்களிலும் " DiGi SENSE 1.0 " என்னும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் வாகனத்தின் இருப்பிடத்தை அதன் உரிமையாளர்கள் அறிந்து கொள்ள இயலும்.

34] 1937-ல் காங்கிரஸ் சார்பில் 'அசோசியேட்ஸ் ஜர்னல்ஸ் லிமிடெட்' எனும் பெயரில் ஒரு நிறுவனத்தை ஜவகர்லால் நேரு துவக்கினார்.

- காங்கிரஸ் கட்சியின் சார்பில் துவக்கப்பட்ட இந்த நிறுவனம் சார்பில் ஆங்கிலத்தில் 'நேஷனல் ஹெரால்ட்', இந்தியில் 'நவ்ஜீவன்' மற்றும் ' உருதுவில் ' கவுமி ஆவாஸ்' ஆகிய பெயர்களில் நாளிதழ்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வந்தன.

- இடையில் நிறுத்தப்பட்ட இந்த நாளிதழ்கள் மீண்டும் வெளியாக உள்ளதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

35] இந்தியாவில் முதலீடுகளைக் கவரும் முயற்சியில், 18 மாதங்களில் பொருளாதாரத்தில் 1.5 மில்லியன் டாலர் முதலீடு செய்யும் வெளிநாட்டவருக்கு இந்தியாவில் குடியிருப்பு அந்தஸ்து வழங்க இந்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தக் குடியிருப்பு அந்தஸ்து பத்து வருடங்களுக்கு வழங்கப்படும். அதை அடுத்த பத்து வருடங்களுக்கு புதுப்பித்து கொள்ளலாம்.

- உலக வங்கியின் எளிமையான வர்த்தக குறியீட்டில் இந்தியா 130 ஆவது இடத்தில் உள்ளது.

36] பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் (பிஐஏ) பைலட்களாக பணியாற்றும் " மர்யம் மசூத், எரும் மசூத் " என்கிற சகோதரிகள் இருவர், போயிங் 777 ரக விமானத்தில் சேர்ந்து பணியாற்றினர்.

- இதன் மூலம் ஒரே விமானத்தில் பணியாற்றிய முதல் பைலட் சகோதரிகள் என்ற சாதனை படைத்துள்ளனர்.

37] அமெரிக்காவில் (வான்கூவர்) நடைபெற்ற மாஸ்டர் கேமில் (Master Game) இந்தியாவை சேர்ந்த 100 வயது பெண்மணி மன் கவுர், 100 மீ ஓட்டத்தில் 1 நிமிடம் 21 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார்.

- கடந்த ஏழு ஆண்டுகளில் உலகம் முழுவதும் நடைபெற்ற மாஸ்டர் கேம்மில் கலந்து கொண்டு இதுவரை 20 பதக்கங்களை பெற்றிருக்கிறார்.

- மாஸ்டர் கேம் விளையாட்டுகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. 49 வயதை கடந்த அனைவரும் மாஸ்டர் கேம் விளையாட்டில் பங்கெடுக்கலாம்.

38] இந்திய ஆன்மிக குருவான சின்மயா குமார் கோஸின் பிறந்தநாளை முன்னிட்டு, அவரது சீடர்கள் 45 அடி நீளம் மற்றும் 10 அடி அகலம் கொண்ட கேக் மீது 72 ஆயிரம் மெழுகுவர்த்திகளை ஏற்றி உலக சாதனை படைத்துள்ளனர்.

39] Great Elephant Census (GEC)

* ஆப்ரிக்க கண்டத்தின் யானைகள் எண்ணிக்கை, கடந்த பத்து வருடங்களில் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது என ஆப்ரிக்க ஆதரவு அமைப்பு இயக்கத்தின் கணக்கெடுப்பு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

- இந்த மிகப்பெரிய யானை கணக்கெடுப்பு, 18 நாடுகளில் சவன்னா நதியின் சுமார் அரை மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தை கடந்து எடுக்கப்பட்டுள்ளது.

40] ஐம்பது ஆண்டுகள் பழமையான எதிரிச் சொத்துச் சட்டத்தில் திருத்தம் செய்யும் வகையில் நான்காவது முறையாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- இந்தியா-பாகிஸ்தான் இடையே, கடந்த 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற போருக்குப் பிறகு இந்தியாவில் இருந்து பலர் தங்களது சொத்துகளை விட்டுவிட்டு பாகிஸ்தானுக்குப் புலம் பெயர்ந்தனர். அந்தச் சொத்துகளை, "எதிரிச் சொத்து' என்ற பெயரில் மத்திய அரசு நிர்வகித்து வருகிறது. அதற்காக, எதிரிச் சொத்துச் சட்டத்தை மத்திய அரசு கடந்த 1968-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. அந்தச் சொத்துகளுக்கு முறைகேடாக யாரும் உரிமை கோருவதையும், தங்களது பெயரில் மாற்றிக் கொள்வதையும் தடுக்கும் வகையில் எதிரிச் சொத்துச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

- கடந்த ஜனவரி மாதம் முதன்முதலில் எதிரிச் சொத்து அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

- ஒரு முறை பிறப்பிக்கப்படும் அவசரச் சட்டம், நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கிய 42 நாள்களில் அதன் ஒப்புலைப் பெறாவிட்டால் காலாவதியாகி விடும்.

- இதனால், கடந்த ஏப்ரலில் இரண்டாவது முறையாக அவசரச் சட்டம் பிறக்கப்பட்டது. கடந்த மே மாதம் 31-ஆம் தேதி மூன்றாவது முறையாகப் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம், ஆகஸ்ட் 28ல் காலாவதியாகிவிட்டது. இந்நிலையில், தற்போது நான்காவது முறையாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

41] குஜராத் மாநிலத்தில் உள்ள ஹரப்பா நாகரிக காலத்தைச் சேர்ந்த " தோலாவீரா துறைமுக நகரம் " , சுனாமி எனும் ஆழிப் பேரலையால் அழிந்திருக்கலாம் என கோவா மாநிலத்தைச் சேர்ந்த தேசிய கடலியல் ஆய்வு நிறுவன(என்ஐஓ) விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அறிவித்துள்ளனர்.

- தற்போதைய அகழ்வாய்வுப்படி, 1500 ஆண்டுகளுக்கு தழைத் தோங்கி, வளமாக இருந்த தோலாவீரா குடியிருப்புப் பகுதி, 3 பகுதிகளைக் கொண்டது. அவை அரண்மனை, மத்திய நகரம், கடை நகரம் ஆகும்.

- சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அந்த நகரத்தின் தனித்தன்மையே அதன் தடிமனான சுவராகும். சுமார் 14 முதல் 18 மீட்டர் உயரம் கொண்ட தடிமனான அந்த சுவர், புயல் காற்று, சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளில் இருந்து ஹரப்பா மக்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்காக கட்டப்பட்டுள்ளது.

42] மாநிலங்களவை, சட்டமேலவை தேர்தல்களில் எதிர்காலத்தில் மேம்படுத்தப்பட்ட வயலட் நிற ஸ்கெட்ச் பேனாவை பயன்படுத்த வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- தேர்தலின்போது இந்த பேனாவை வாக்காளர்களிடம் தேர்தல் அதிகாரி வழங்க வேண்டும். அந்த வாக்காளர் தனது வாக்கைப் பதிவு செய்தபின்னர், அதை தேர்தல் அதிகாரி திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளது.
- இதுபோன்ற ஸ்கெட்ச் பேனாவை கர்நாடக மாநிலம், மைசூருவில் இருக்கும் ஒரு நிறுவனம் தேர்தல் ஆணையத்திடம் தயாரித்து அளித்துள்ளது.

43] நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 2015 மசோதாவின் மீது நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரைகள் .

- தவறாக வழிகாட்டும் விளம்பரங்களில் நடிக்கும் திரை நட்சத்திரங்கள் உள்ளிட்ட பிரபலங்களுக்கு முதல்முறை ரூ.10 லட்சம் அபராதம், 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், இரண்டாவது முறையாக அதே தவறைச் செய்தால் ரூ.50 லட்சம் வரை அபராதமும், 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் விதிக்க முடியும்.

- கலப்படம் செய்வோருக்கு இதே தண்டனையுடன், அவர்களது வர்த்தக உரிமத்தை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு பின் இம்மசோதா நாடாளுமன்றத்தில் மறுதாக்கல் செய்யப்படவுள்ளது.

44] உலகிலேயே மிகப் பெரிய சிகரமான எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்துள்ளதாக போலியான புகைப்படத்தைக் காண்பித்து, சான்றிதழ்களை பெற்றதாகக் கூறி, புணேவில் காவலர்களாக பணிபுரிந்துவரும் தினேஷ் மற்றும் தாராகேஷ்வரி ரதோட் என்ற தம்பதிகளுக்கு நேபாளத்தில் உள்ள எந்தவொரு சிகரத்திலும் அடுத்த 10 ஆண்டுகள் ஏறுவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

- அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

- இவர்கள் இருவரும் கடந்த மே மாதம் 23-ஆம் தேதி, எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்து சாதனை படைத்ததாக போலியான புகைப்படம் தயாரித்து வெளியிட்டனர்.

45] ஒற்றை என்ஜின் பொருத்திய சிறிய ரக விமானத்தில் தன்னந்தனியாக உலகைச் சுற்றி வந்து சாதனை புரிந்திருக்கிறார் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 18 வயது இளைஞர் லாக்லன் ஸ்மார்ட்.

- மிக இளம் வயதில் உலகைச் சுற்றியவர் என்ற புதிய உலக சாதனையை அவர் படைத்தார்.

- ஆஸ்திரேலியாவின் மரூக்கிடோர் விமான நிலையத்திலிருந்து கடந்த ஜூலை மாதம் 4-ஆம் தேதி புறப்பட்ட அவர், உலகைச் சுற்றி வந்து ஏறத்தாழ இரண்டு மாத காலத்துக்குப் பிறகு ஆகஸ்ட் 27ல் அதே விமான நிலையத்தில் தரையிறங்கினார்.

- அவரது 45 ஆயிரம் கி.மீ. பயணத்தின் இடையே 15 நாடுகளில் 24 இடங்களில் இறங்கி ஓய்வெடுக்கவும், உணவு சேகரிக்கவும், எரிபொருள் நிரப்பவும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

- மிகச் சிறிய வயதில் தன்னந்தனியாக உலகைச் சுற்றி வந்து சாதனை நிகழ்த்தியபோது அவருடைய வயது 18 ஆண்டுகள், 7 மாதம், 21 நாட்களாகும். இதற்கு முந்தைய உலக சாதனையை அமெரிக்க இளைஞர் மாத்யூ கத்மில்லர் நிகழ்த்தியபோது அவருடைய வயது 19 ஆண்டு, 7 மாதம் 15 நாட்களாக இருந்தது.

46] A B The Autobiography

* எழுதியவர் --- தென் ஆப்ரிக்க கிரிக்கெட் வீரர் ஆப்ரஹாம் பெஞ்சமின் டி வில்லியர்ஸ் என்ற A B டி வில்லியர்ஸ்

47] MANUS தீவில் உள்ள அகதிகள் தடுப்பு முகமை மூடுவதாக பாப்புவா நியு கினியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அறிவித்துள்ளன.

48] ஸ்கார்பியன் நீர்மூழ்கி கப்பலின் தொழில்நுட்பங்கள் பற்றிய ரகசிய தகவல்கள் The Australian பத்திரிகையில் வெளியானது பற்றி ஆராய, கடற்படையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் தலைவர் --- அசோக்குமார்.

49] Mera Aspataal / My Hospital என்ற திட்டத்தை மத்திய சுகாதார துறை அமைச்சர் திருப்பதியில் துவக்கி வைத்துள்ளார்.

- இத்திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளிடமிருந்து கருத்துக்களை அறிந்து பொது சுகாதாரத்தின் தரத்தை மேம்படுத்துவது ஆகும்.

50] புது தில்லியில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பல்கலைக்கழகமான TERI (The Energy and Resources Institute) பல்கலைக்கழகத்தின் வேந்தராக - மத்திய அரசின்

முன்னாள் நிதி செயலாளர் அசோக் சாவ்லா (Ashok Chawla) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

51] உலக வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் 'தளவாடங்கள் செயல்திறன் பட்டியல் - 2016 ல் இந்தியா 35 வது இடத்தை பெற்றுள்ளது.

- இந்த அறிக்கை உலக வங்கியினால் Logistics Performance Index (LPI) என்னும் பெயரில் இரு ஆண்டுகளுக்கு இருமுறை வெளியிடுகிறது

52] தூய்மை இந்தியா' திட்டத்திற்காக ஒரு காமிக் நாவல் புத்தகத்தை தயாரிப்பதற்காக மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் பிரபல காமிக் புத்தக நிறுவனமான 'அமர் சித்ரா கதா' (Amar Chitra Katha) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

53] பொதுநிதி மேலாண்மை (Public Fund Management System - PFMS) என்னும் மத்திய அரசின் திட்டங்களை நிர்வகிப்பதற்கான திட்டமானது நாட்டிலேயே முதன் முறையாக ஜார்கண்ட் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

54] செப்டம்பர் 4 - உலக பாலியல் நலன் விழிப்புணர்வு தினம் / World Sexual Health Day

Theme 2016 - Eliminating Sexual Myths

55] உலகின் மிகவும் மதிப்பு மிக்க மகிழுந்து தயாரிப்பு நிறுவனமாக ஜப்பானை பிறப்பிடமாகக் கொண்ட “டயோட்டா கார்” நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிரிட்டனைச் சார்ந்த சந்தை ஆராய்ச்சி நிறுவனமான மில்வார்டு பிரவுன் (Millward Brown) ஆய்வு முடிவு இதனை தெரிவித்துள்ளது.

56] பிரிட்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 16 வயது சிறுவன் கிர்தின் நித்தியானந்தம் , மிகவும் தீவிரமான, மருந்துகளுக்கு கட்டுப்படாத 3 (ட்ரிபிள்) எதிர்மறை மார்பக புற்று நோய்க்கு சிகிச்சை முறையைக் கண்டறிந்துள்ளார்.

57] அலைபேசி வழியிலான பணப்பரிமாற்றத்தை எளிதாக்க ICICI வங்கி" iMobile SmartKeys " என்னும் விசைப்பலகையை அறிமுகம் செய்துள்ளது.

58] "CFSI Film Bonanza" என்ற பெயரில் குழந்தைகள் திரைப்பட விழா நாகாலாந்தில் ஆகஸ்ட் 23 முதல் ஒரு வார காலத்திற்கு நடைபெற்று முடிந்துள்ளது. இதனை The Children's Film Society of India (CFSI) ஏற்பாடு செய்து இருந்தது.

59] போர்ப்ஸ் பத்திர்கை வெளியிட்ட உலகின் மிக புதுமையான நிறுவனங்கள் - 100 பட்டியலில்., இந்தியாவின் ஆசியன் பெயின்ட்ஸ் 18வது இடம் பிடித்துள்ளது.
ஹிந்துஸ்தான் லீவர் , TCS, சன் பார்மா, L & T ஆகிய இந்திய நிறுவனங்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

60] அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பாதுகாக்கப்பட்ட கடல் பரப்பை ஹவாய் தீவுப்பகுதியில் " Papahanaumokuakea Marine National Monument " (Papahanaumokuakea கடல் தேசிய நினைவு சின்னம்) உருவாக்கியுள்ளது.

61] சீனா தனது நாட்டின் Guangzhou வில் இருந்து ரஷ்யாவின் Vorsino (Kaluga Region) க்கு சரக்கு ரயில் போக்குவரத்து சேவையை தொடங்கியுள்ளது. இது 11,500 கிலோமீட்டர் தூரம் கொண்டது.

62] Digicell என்ற நிறுவனத்தின் வாழ்நாள் தூதுவராக - CHIEF SPEED OFFICER - என்ற பெயரில் ஒலிம்பிக் ஓட்டப்பந்தைய வீரர் உசேன் போல்ட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

63] சுகாதாரத்தை சிறப்பாக பேணும் வகையில் பொதுமக்களுக்கு எடுத்துகூற "Asli Tarakki" என்னும் பிரச்சார இயக்கத்தை மத்திய அரசு துவக்கியுள்ளது.

64] கோவா மாநில அரசு டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் அரசு நடைமுறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை செயல்படுத்த கூகுள் இந்தியா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

65] ATP PLAYER COUNCIL தலைவராக நோவக் ஜோகோவிக் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

66] செம்மறியாட்டு வகையான செவ்வாடு, வெள்ளாடு என்ற 2 கொடியாடு இனங்களுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் கீழ் செயல்படும் தேசிய கால்நடை மரபுசார் வளங்கள் மையம் அங்கீகாரம் அளித்துள்ளது.

- இந்த ஆடு இனங்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, ராமநாதபுரம் பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது.

67] செம்மரத்தின் வேர் முதல் இலை வரை ஆராய்ந்து, அதில் மருத்துவ குணங்கள் உள்ளதா என்பதை அறியும் பொறுப்பை இந்திய தொழில்நுட்ப ரசாயன நிறுவனத்திடம் (ஐஐசிடி) ஆந்திர அரசு ஒப்படைத்துள்ளது.

68] சீனாவின் ஹாங்சோவில் ஜி- 20 நாடுகளின் உச்சி மாநாடு செப்டம்பர் 4 மற்றும் 5ம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

- இந்த உச்சி மாநாட்டில் ஜி-20 நாடுகளின் உறுப்பினர்களைத் தவிர ஐ.நா உலக வங்கி,சர்வதேச நாணய நிதியம்,உலக வர்த்தக அமைப்பு, பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பு மற்றும் நிதி நிலைப்புத்தன்மைக் குழு என்ற 7 சர்வதேச அமைப்புககளின் தலைவர்களும் இதில் பங்கேற்கிறார்கள்.

- துவக்கத்தில் ஜி-8 நாடுகளாக அமெரிக்காவில் தொடங்கி செயல்பட்ட இந்த எட்டு நாடுகளின் குழு பின்னர் அடைந்த வளர்ச்சி தான் தற்போதைய ஜி- 20 என்பது. இவற்றின் மொத்த தேசிய உற்பத்தி மதிப்பு உலகின் மதிப்பில் 85 விழுக்காடு என்ற அளவில் உள்ளது, இந்த நாடுகளின் மொத்த மக்கள் தொகை மூன்றில் இரண்டு மடங்காக உள்ளது.

- 2015ல் G - 20 மாநாடு துருக்கியில் நடைபெற்றுள்ளது.

69] பிரேசில் அதிபர் பதவியிலிருந்து டில்மா ரூஸஃப் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் புதிய அதிபராக மிஷெல் டெமர் பதவியேற்றுள்ளார்.

70] பிரபல நடிகர் ஜாக்கி சான் , படத்தொகுப்பாளர் கோட்ஸ், காஸ்டிங் இயக்குநர் லின் ஸ்டால்மாஸ்டர், ஆவணப்பட இயக்குநர் வைஸ்மேன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனைக்கான ஆஸ்கர் விருது வழங்கப்பட உள்ளது.

71] அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களின் மகப்பேறு கால விடுப்பு 6 மாதத்தில் இருந்து 9 மாதங்களாக உயர்த்தப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

72] Scramjet Engine (ஸ்கிராம்ஜெட் இன்ஜின்) என்பதின் விரிவாக்கம் ----- Supersonic Combustion Ramjet Engine என்பதே ஆகும்.

73] Prakampana Humanitarian Assistance and Disaster Relief Exercises -2016

* ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினத்தில், ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 01ம் தேதி மாநில அரசின் பல்வேறு துறைகளுடன் முப்படைகளும் இணைந்து முதலாவது பேரிடர் மீட்பு மற்றும் மனிதாபிமான உதவி ஒத்திகையை செயல்படுத்தியுள்ளன.

- இதற்கு 1st Prakampana HADR Exercises என பெயரிட்டுள்ளனர்.
- Prakampana என்றால் சமஸ்கிருதத்தில் புயல் என்று பொருள்.

74] Exercise Sahayata - 2016

* குஜராத் மாநிலம், பூஜ் நகரில் இந்திய விமானப்படை , மாநில அரசின் பல்வேறு துறைகளுடன் இணைந்து பூகம்ப மீட்பு ஒத்திகையில் செப்டம்பர் 14 முதல் 16 வரை ஈடுபடவுள்ளன.

- இந்த ஒத்திகைக்கு Exercise Sahayata - 2016 என பெயரிடப்பட்டுள்ளது.

75] அஸ்ஸாம் மாநிலம் பிரம்மபுத்திரா நதியில் அமைந்துள்ள மஜுலி (Majuli) தீவு, உலகிலேயே மிகப்பெரிய ஆற்றுத்தீவு என்ற வகையில் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

- இதற்குமுன் அமேசான் நதியில் அமைந்துள்ள Marajo (பிரேசில்) தீவு இச்சாதனையை செய்து இருந்தது.

- மஜுலி தீவில் மொத்தம் 144 கிராமங்கள் உள்ளன. 1,60,000 மக்கள் வசிக்கின்றனர். 880 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது.

76] India's First international conference on LPG

- சமையல் எரிவாயு பற்றிய முதல் சர்வதேச மாநாடு, ஒடிஷா மாநிலம், புவனேஸ்வரில் செப்டம்பர் 01 மற்றும் 02 தேதிகளில் நடைபெற்று முடிந்துள்ளது.
- இதில் பிரேசில், கானா, நைஜீரியா, நேபாள், ஸ்ரீலங்கா உள்ளிட்ட 12 நாடுகள் கலந்து கொண்டுள்ளன.

77] இந்திய போட்டி ஆணையம் (The Competition Commission of India -- CCI) முறையற்ற விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்வதாக கூறி 10 சிமிண்ட் உற்பத்தி ஆலைகளுக்கும், சிமிண்ட் உற்பத்தியாளர்கள் அமைப்புக்கும் அபராதம் விதித்துள்ளது.

{ ACC, ACL, Binani, Century, India Cements, JK Cements, Lafarge, Ramco, UltraTech and Jaiprakash Associates.}

78] பீகார் மாநிலத்தில், கங்கை நதியில் படிந்துள்ள வண்டல் மண் பற்றி ஆராய A.K. சின்கா (கங்கை நதி வெள்ள தடுப்பு ஆணைய உறுப்பினர்) தலைமையில் 4 நபர் கொண்ட கமிட்டியை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

- கடந்த சில நாட்களுக்கு முன் பீகார் முதல்வர் பிரதமரை சந்தித்து,

கங்கையில் படிந்துள்ள வண்டல் மண் படிவங்களால் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாக புகார் அளித்து இருந்தார்.

79] டெல்லியில், முப்படைகளுக்குமான தேசிய போர் நினைவு சின்னம் மற்றும் போர் அருங்காட்சியகம் (National War Memorial and National War Museum) அமைக்க பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

80] CLMV நாடுகள் எனப்படும் கம்போடியா(C), லாவோஸ (L) , மியான்மர் (M) மற்றும் வியட்நாம் (V) ஆகிய நாடுகள் உடனான பொருளாதரா திட்டங்களை நிறைவேற்ற ரூ.500 கோடி முதலீட்டில் " திட்ட மேம்பாடு நிதி" (Project Development Fund - PDF) உருவாக்க மத்திய அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

81] மத்திய உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து கழகத்தை Central Inland Water Transport Corporation Limited (CIWTC). கலைக்க மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

82] இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஜார்கண்ட் மாநிலம் பொது நிதி மேலாண்மை அமைப்பை (Public Fund Management System - PFMS) செயல்படுத்தியுள்ளது.

83] ஏப்ரல் 2016ல் மாஸ்கோவில் நடைபெற்ற மணற்சிற்ப போட்டியில் இந்தியாவின் சுதர்சன் பட்நாயக் தங்க பதக்கம் பெற்று இருந்தார்.

- அந்த போட்டியில் சுதர்சன் உருவாக்கியிருந்த மகாத்மா சிற்பம் , உலக அமைதி என்ற பிரிவில் பார்வையாளர்கள் பரிசை வென்றுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- 80,000 பார்வையாளர்களில் சுமார் 60,000 பார்வையாளர்கள் மகாத்மா சிற்பத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

84] மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு தேசியக் கட்சி என்ற அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

- இதன்மூலம் நாட்டின் 7-வது தேசியக் கட்சியாக திரிணமூல் காங்கிரஸ் உயர்ந்துள்ளது.

- ஏற்கனவே காங்கிரஸ் , பா.ஜ.க., பகுஜன் சமாஜன் கட்சி ,தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தேசிய கட்சி என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளன.

- தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) உத்தரவு 1968 விதியின்படி குறைந்தது நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த ஒரு விதியை திரிணமூல் காங்கிரஸ் பூர்த்தி செய்ததை அடுத்து தேசியக் கட்சி அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- மேற்கு வங்கம், மணிப்பூர், திரிபுரா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், திரிணமூல் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்த அங்கீகாரத்தின் மூலம், திரிணமூல் கட்சியின் சின்னத்தை நாடு முழுவதும் வேறெந்த கட்சிகளோ, சுயேச்சைகளோ பயன்படுத்த முடியாது.

85] Awaaz e Punjab

- முன்னாள் கிரிக்கெட் வீரர் நவ்ஜோத் சிங் சித்து " ஆவாஸ் இ பஞ்சாப் " என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியுள்ளார்.

86] செப்டம்பர் 16 முதல் 18 வரை பூடான் நாட்டில் ஆசிய டென்னிஸ் போட்டிகள் நடைபெற உள்ளது.

87] செப்டம்பர் -- 1 உலக கடித தினம்

* செப்டம்பர். -- 2 உலக தேங்காய் தினம்

* ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாத முதல் சனிக்கிழமை (இந்த ஆண்டு செப்டம்பர் -- 3) அன்று உலக வல்லூறு தினம் கொண்டாடப்படுகிறது.

88] மின் வணிக நிறுவனமான ஸ்னாப்டீல் (Snapdeal) வாடிக்கையாளர்கள் எளிதான வகையில் வர்த்தகம் மேற்கொள்ள, தனக்கென CIRRUS என்ற பெயரிலான மேககணிணி தளத்தை (Cloud Platform) உருவாக்கியுள்ளது.

89] உயிரி அறிவியல் மற்றும் ஆராய்ச்சி துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய Biocon நிறுவன தலைவர் கிரண் மஜூம்தார் ஷா க்கு பிரான்ஸ் அரசு Chevalier de l'Ordre National de la Legion d'Honneur' (Knight of the National Order of the French Legion of Honour) என்ற சிறப்பை வழங்குவதாக அறிவித்துள்ளது.

- ஏற்கனவே கமல்ஹாசனுக்கு Chevalier de L'Ordre Arts et Lettres (The Knight of the Order of Arts and Letters) என்ற சிறப்பை வழங்குவதாக பிரான்ஸ் அறிவித்து இருந்தது.

90] இந்தியாவுக்கான நேபாள தூதராக தீப் குமார் உபாத்யாயா மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- இவர் ஏற்கனவே ஏப்ரல் / 2015 முதல் மே 6 / 2016 வரை இந்திய தூதராக பணிபுரிந்துள்ளார்.

91] கடந்த இருமாதங்களாக காஷ்மீரில் கலவரக்காரர்களுக்கு எதிராக பயன் படுத்தப்பட்ட பெல்லட் வகை குண்டுகளுக்கு பதிலாக இனி பாதுகாப்பு படையினர் மிளகாய் பொடி நிரப்பப்பட்ட " பவா குண்டுகளை " (Pava Shells) பயன்படுத்த மத்திய உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

நடப்பு நிகழ்வுகள் வினா / விடை
==========
01) புற்றுநோயால் பாதிக் கப்பட்ட சிறுவனின் சிகிச்சைக்காக ரியோ ஒலிம்பிக்கில் வென்ற பதக்கத்தை விற்று உதவிய வீரர் யார் ? .. எந்த

நாட்டை சேர்ந்தவர் ? ... எந்த போட்டியில் பதக்கம் வென்றவர் ? .... எந்த பதக்கம் வென்றுள்ளார் ?

02) உ.பியின் திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் மூத்த துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?

03) பூமியை துல்லியமாக படமெடுக்க சமீபத்தில் சீனா அனுப்பிய ராக்கெட் எது ?

04) மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 7% வட்டியில் எந்த திட்டத்தின் கீழ் கடன்வழங்கவேண்டும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ?

05) நிதி ஆயோக் அமைப்பின் முதலாம் ஆண்டு கூட்டத்தில் பிரதமர் மோடிய பேசிய தலைப்பு

a) emerging india

b) growing india

c) transforming india

d) modifing india

06) சமீபத்தில் காலமான சுவாமி பரமுக் மகராஜ் தொடர்புடைய ஆலயம் எது?

a) பூரி ஜெகநாதர் ஆலயம்

b) டெல்லி அக்சார்தம் ஆலயம்

c) சிருங்கேரி சாரதா ஆலயம்

d) சோம்நாத் ஆலயம்

07) பிரதமர் மோடியின் "மனதின் குரல் " (Maan ki baat) வானொலி உரை எந்த அண்டை நாட்டிலும் ஒலிபரப்பு செய்யப்படுகிறது?

08) பல்வேறு ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட வீரர்கள் இணைந்து துவக்கியுள்ள Olympians Association of India (OAI) என்ற அமைப்பின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?

09) உலகின் முதல் மாணவர் டிஜிட்டல் காப்பகம் (world's first digital incubator for student) S.V.Co எங்கு துவங்கப்பட்டுள்ளது?

10) மத்திய அரசின் சார்பில் தீவிர டெங்கு தடுப்பு இருவாரம் எப்போது கடைபிடிக்கப்பட்டது?

11) Computer History Museum Book Prize பெற்றவர் யார்? எந்த புத்தகத்திற்காக பெற்றுள்ளார்?

12) Tuluni திருவிழா எந்த மாநிலம் தொடர்புடையது?

13) உள்ளூர் மொழியில் கல்விபயிலும் மாணவர்களுக்கு மாதந்திர உதவித்தொகை வழங்கும் மாநிலம் எது ? .... எந்த மொழி / மொழிகள் ? ... உதவித்தொகை எவ்வளவு ?

14) 2016 Homeless World Cup எங்கு நடைபெற்றது ? ..... என்ன விளையாட்டுக்கான போட்டி ? ... போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற நாடு எது?

15) BRICS Policy Planning Dialogue Meetting - பிரிக்ஸ் கொள்கை திட்டமிடல் உரையாடல் கூடுகை எங்கு நடைபெற்றது?

16) இதுவரை தங்க பத்திர முதலீட்டு திட்டம் எத்தனை முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது? ..... இதில் குறைந்த முதலீடு எத்தனை கிராம் ? ..... அதிகபட்ச முதலீடு எத்தனை கிராம் ?

17) மின்வசதி இல்லாத கிராமப்புற மாணவர்கள் வீடுகளுக்கு சூரிய மின்விளக்கு பொருத்தும் திட்டத்தை துவங்கிய வங்கி எது ? அத்திட்டத்தின் பெயர் என்ன ?

18) அமெரிக்க வெளியுறவு துறை செயலர் ஜான்கெர்ரி, ஆகஸ்ட் 30ல் டெல்லியில் எந்த கல்லூரியில் மாணவர்களிடையே உரையாற்றியுள்ளார்?

.

.

விடை

======

.

01) பயோர் மாலசோவ்ஸ்கி ... போலந்து .. வட்டு எறிதல் .. வெள்ளிப் பதக்கம்

02) ஜெயப்பிரதா

03) Goafen - 3

04) Deendayal Antyodaya Yojana - National Rural Livelihoods Mission

05) Transforming india

06) டெல்லி அக்சார்தம் ஆலயம்

07) பங்களாதேஷ்

08) சிவா கேசவன் - தடகள வீரர்

09) கேரளா

10) ஜூலை 11 முதல் 23 வரை

11) தினேஷ் சர்மா .. The Outsourcer : The Story of India's IT Revolution

12) நாகலாந்து

13) கோவா .., கொங்கனி மற்றும் மராத்தி ., ரூ. 400 /=

14) கிளாஸ்கோ (பிரிட்டன்) .. கால்பந்து .. மெக்ஸிகோ

15) பாட்னா

16) இதுவரை 4 முறை .. குறைந்தபட்சம் 1 கிராம் .. அதிக பட்சம் 500 கிராம்

17) கர்நாடகா வங்கி .., Solar Light Scholarship Programme

18) IIT டெல்லி.

92] Operation Romeo

==========

ஆகஸ்ட் 27 / 2016 அன்று இரவில் ஹரியானா மாநிலம், குருகிராம் (பழைய பெயர் - குர்ஹான்) நகர காவல்துறையினர் " Operation Romeo " என்ற செயல்திட்டத்தின்படி சாலையில் செல்லும் பெண்கள் , வணிக வளாகங்கள் மற்றும் தியேட்டர்களில் பெண்களை கேலி செய்தவர்களை கைதுசெய்துள்ளனர்.

Operation Romeo Returns

==========

தற்போது மீண்டும் செப்டம்பர் 03 / 2016 அன்று இரவில் " Operation Romeo Returns " என்ற செயல்திட்டத்தின் படி சாலையில் செல்லும் செல்லும் பெண்கள் , வணிக வளாகங்கள் மற்றும் தியேட்டர்களில் பெண்களை கேலி செய்தவர்களை கைதுசெய்துள்ளனர்.

93] First Wifi hotspot in Villege

ஹரியான மாநிலத்தில் முதன்முறையாக , குருசஷத்திரா மாவட்டம் , Pehowa நகருக்கு அருகில் அமைந்துள்ள Gumthala Garhu என்ற கிராமத்தில் இலவச Wifi வசதி, 10mbps வேகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

94] கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் ஆசிரியர் தினமான செப்டம்பர் 05ல் (இன்று) ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள ' டாக்டர். ராஜேந்திர பிரசாத் சர்வோதயா வித்யாலயா பள்ளியில் ' " இந்திய அரசியலின் பரிணாம வளர்ச்சி " என்ற தலைப்பில் பள்ளி மாணவர்களுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பாடம் நடத்தியுள்ளார்.

95] மனிதர்கள் உருவாவதற்குப் பல கோடி வருடங்களுக்கு முந்தைய தொல்லுயிர்ப் படிமங்களை கிரீன்லாந்து நாட்டில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

* 370 கோடி வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்தவை அவை. இதுவரை கிடைத்ததிலேயே பழமையானவை. கிருமிகள் அப்படியே பாறைகளாக உறைந்து தொல்படிமங்களாக மாறியுள்ளன என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

* வெளித் தோற்றத்தில் பாறைகளாகத் தோன்றுகிற இவை, உண்மையில் அடுக்கடுக்கான பாக்டீரியா கிருமிகளின் கட்டமைப்புகள் ஆகும். இந்த பாறை படிமங்களை ஸ்ட்ரோமாடோலிட்ஸ் (Stromatolites) என்றுவிஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

* 220 கோடி வருடங்களுக்கு முந்தைய படிமங்களும், 350 கோடி வருடங்களுக்கு முந்தைய படிமங்களும் ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

* தற்போது கிடைத்துள்ள படிமங்களும் ஆஸ்திரேலியாவில் கிடைத்துள்ள தொல்படிமங்கள் போலவே இருக்கின்றன. ஆனால், அவற்றில் இல்லாதவகையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பாறைகளில் புடைப்புகள் உள்ளன. அவை இவற்றின் பழமையை நிரூபிக்கின்றன.

96] செப்டம்பர் 04ல் வாடிகன் சதுக்கத்தில் நடந்த சிறப்பு பிரார்த்தனையில், அன்னை தெரசாவை புனிதராக போப் பிரான்சிஸ் அறிவித்தார்.

* அல்பேனியாவில் கடந்த 1910-ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் தேதி பிறந்தவர் அன்னை தெரசா. கடந்த 1929-ம் ஆண்டு இந்தியாவில் சேவை செய்ய வந்த அவர் கொல்கத்தாவில் வீடில்லாதவர்கள், மரண தருவாயில் ஆதரவின்றி இருந்தவர்கள், தொழுநோயாளிகள், காசநோயாளிகளின் நலனுக்காக சேவை செய்யத் தொடங்கினார்.

* கொல்கத்தாவில் கடந்த 1950-ம் ஆண்டு 'மிஷனரிஸ் ஆப் சாரிட்டி' என்ற சேவை அமைப்பை தொடங்கி தனது வாழ்நாள் முழுவதும் ஏழைகளுக்கு சேவைபுரிவதை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தார்.

* கடந்த 1979-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1980-ம் ஆண்டு இந்தியாவின் உயரிய பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. உலகம் முழுவதும் மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற அன்னை தெரசா, 1997 செப்டம்பர் 5-ம் தேதி காலமானார்.

* வாடிகனில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் 12 பேர் பங்கேற்றனர். அதில் டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சர் ஹர்சிம்ரத் கவுர் பாதல், மக்களவை எம்.பி.க்கள் கே.வி.தாமஸ், கே.மணி, ஆன்டோ அந்தோணி, கோவா துணை முதல்வர் பிரான்சிஸ் டிசோசா ஆகியோரும் அடங்குவர்.

* கடந்த 1946-ம் ஆண்டு செப்டம்பர் 10-ம் தேதி, மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் பகுதியில் சேவை செய்ய அன்னை தெரசா மலை ரயிலில் (டாய் டிரெயின்) பயணம் செய்தார். அதை நினைவுகூரும் வகையில், டார்ஜிலிங் ஹிமாலயன் ரயில்வே அதிகாரிகள், நேற்று மலை ரயிலை மீண்டும் இயக்கினர்.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இருந்து சத்யா நகர் மற்றும் கட்டாக் பூரி நெடுஞ்சாலையை இணைக்கும் முக்கிய சாலைக்கு, அன்னை தெரசா பெயர் நேற்று சூட்டப்பட்டது.

97] மிகப் பழமையான பவளப் பாறைகள் உள்ளிட்ட 7,000க்கும் மேற்பட்ட அரியவகை கடல்சார் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்களைக் கொண்ட பபஹனோ மோகுவாகி கடல்சார் தேசிய நினைவுச் சின்னத்தை விரிவாக்கம் செய்ததற்கு நன்றியாக,

* குரே அட்டோல் கடல்பகுதியில், 300 அடி ஆழத்தில் கடந்த ஜூன் மாதம் கண்டறியப்பட்ட அரியவகை மீன் ஒன்றுக்கு ஒபாமாவின் பெயரை சூட்ட விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

* இந்த மீனின் உடலில் காணப்படும் வண்ண அமைப்பு, அதிபர் ஒபாமாவின் தேர்தல் பிரச்சார குறியீடு போலவே இருப்பதாக விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர்.

* ஏற்கெனவே 2002-ம் ஆண்டில் டென்னிசி ஆற்றில் கண்டறியப்பட்ட புதுவகை மீன் ஒன்றுக்கு ஒபாமாவின் பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

98] சொத்து சமநிலை அற்ற நாடுகள் பட்டியல் பற்றி நியூ வேர்ல்டு வெல்த் நிறுவனம் ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்த பட்டியலில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

* கிட்டத்தட்ட நாட்டில் உள்ள 54% சொத்துக்கள் கோடீஸ்வரர்கள் கையிலேயே உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

* தனிநபர்களின் மொத்த சொத்துக்கள் அடிப்படையில் 10 பணக்கார நாடுகள் பட்டியலில் இடம்பிடித் துள்ளது. இந்தியாவில் உள்ள தனி நபர்களின் மொத்த சொத்துமதிப்பு 56,00,000 கோடி டாலர். ஆனால் சராசரி இந்தியர்கள் ஏழையாகவே இருக்கின்றனர்.

* சர்வதேச அளவில் முதலிடத்தில் உள்ள ரஷ்யாவில் 62% சொத்துக்களைக் கோடீஸ்வரர்கள் வைத்துள்ளனர்.

99] All Women Police Control Room vans

---

* நாட்டிலேயே முதன் முறையாக மகளிர் மட்டும் கொண்ட போலீஸ் கட்டுப்பாட்டு அறை ரோந்து வேன்கள் டெல்லியில் அறிமுகமாகிறது.

* துவக்கத்தில் சோதனைக்கட்டமாக ஐந்து வேன்கள் அறிமுகமாக உள்ளன. ஒவ்வொரு வேன்களிலும் ஒரு கமாண்டோ உட்பட மூன்று மகளிர் இருப்பார்கள். இதில் சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களின் அனைத்து புகார் போன்களும் ஏற்கப்பட்டு நடவடிக்கையில் இறங்க உள்ளன.

* இவை அடுத்து மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

100] வளர்ப்பு யானைகள் (கோவில் யானைகள்) பராமரிப்பை கண்காணிக்க, தலைமை வன உயிரின காப்பாளரை தலைவராகவும், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயக்குநரை உறுப்பினர் செயலராகவும், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவத்துறை இயக்குநர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாநில அளவிலான வளர்ப்பு யானைகள் நலக் குழு அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

101] தமிழ்நாடு குழந்தைகள் நல ஆணையராக, மதுரை காமராஜ் பலகலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திருமதி. கல்யாணி மதிவாணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

* இதற்குமுன் இந்த பதவியில் இருந்தவர் -- திருமதி. சரஸ்வதி ரெங்கசாமி

102] 14th ASEAN - India Summit and 11th East Asia Summit
==========

* 14வது ஆசியான் - இந்தியா உச்சி மாநாடு மற்றும் 11வது கிழக்கு ஆசியா உச்சி மாநாடு, செப்டம்பர் 8ல் லாவோஸ் நாட்டின் Vientiane நகரில் நடைபெறவுள்ளது.

103] *Summer Olympics*

2012 - London, UK

2016 - Rio de Janeiro, Brazil

2020 - Tokyo, Japan

Winter Olympics

2014 - Sochi, Russia

2018 - Pyeongchang, South Korea

2022 - Beijing, China

∗Commonwealth Games∗

2010 - New Delhi, India

2014 - Glasgow, Scotland, U.K.

2018 - Gold Coast, Queensland, Australia

Asian Games

2014 - Incheon, South Korea

2018 - Jakarta, Indonesia

∗Hockey World Cup∗

2010 - New Delhi, India (Winner- Australia)

2014 - The Hague, Netherlands (Winner- Australia)

2018 - Bhuvaneshwar,odisha

∗Women Hockey World Cup∗

2010 - Argentina (Winner- Argentina)

2014 - The Hague, Netherlands (Winner- Netherlands)

2018 - London, England

∗FIFA World Cup∗

2010 - South Africa (Winner- Spain)

2014 - Brazil (Winner- Germany)

2018 - Russia

2022 - Qatar

∗Women Football World Cup∗

2011 - Germany (Winner- Japan)

2015 - Canada

∗ICC Cricket World Cup∗

2011 - India, Bangladesh & Sri Lanka (Winner- India)

2015 - Australia and New Zealand

2019 - England

2023 - India

Women Cricket World Cup

2013 - India (Winner- Australia)

2017 - England

2021 - New Zealand

ICC World T-20 World Cup

2014 - Bangladesh (Winner- Sri Lanka)

2016 - India (Winner - West Indies)

Women ICC World T-20 World Cup

2014 - Bangladesh (Winner- Australia)

2016 -- India (Winner - West Indies)

2018 - West Indies

2022 - South Africa

ICC World Test Championship

2017 (1st edition) - England

2021 - India

104] ராணுவத்திற்கு தேவையான தளவாடங்களை இறக்குமதி செய்வதை தவிர்த்து உள்நாட்டிலேயே உற்பத்தி செய்திட ஏதுவாக Army Design Bureau (ADB) ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ராணுவ தலைமை தளபதி ஆகஸ்ட் 30 அறிவித்துள்ளார்.

105] The India Nuclear Insurance Pool (INIP) -- இந்திய அணு உலை காப்பீட்டு தொகுப்பு

* அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் இந்தியா சிவில் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன்படி, அந்த நாடுகள், இந்தியாவில் அணு உலை அமைப்பதற்கு தேவையான சாதனங்களையும், அணு மின்சாரம் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களையும் சப்ளை செய்து வருகின்றன.

* இப்படி அமைக்கப்படும் அணு உலைகளில், விபத்து ஏதேனும் நேரிட்டால், அதற்கான இழப்பீடு கோரி, அணு உலை சாதனங்களை சப்ளை செய்த வெளிநாட்டு நிறுவனங்கள் மீது இந்தியா வழக்கு தொடர உரிமை உள்ளது. அணு உலை விபத்து இழப்பீடு சட்டத்தின் கீழ், இந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

* இதனால், அணு உலை சாதனங்களை சப்ளை செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள், இந்தியாவுக்கு சாதனங்களை சப்ளை செய்ய தயங்கின. விபத்து ஏற்படும் பட்சத்தில், தங்களது நிதிச்சுமையை ஈடு செய்வதற்காக, காப்பீட்டு திட்டத்தை அமைக்குமாறு இந்தியாவை வற்புறுத்தி வந்தன.

* இந்நிலையில், இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க, ரூ.1,500 கோடிக்கான இந்திய அணு உலை காப்பீட்டு தொகுப்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

* இந்திய பொது காப்பீட்டு கழகம் மற்றும் பொதுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த 11 காப்பீட்டு நிறுவனங்கள் இணைந்து இந்த திட்டத்தை தொடங்கியுள்ளன.

* உலகளவில் அணு உலை காப்பீடு தொகுப்பை துவங்கியுள்ள 27வது நாடு இந்தியா ஆகும்.

106] India's first nomad film festival

குற்ற பழங்குடியினர் (Criminal Tribals) தொடர்புடைய முதலாவது Nomed திரைப்பட விழா டெல்லியில் செப்டம்பர் 04ல் நடைபெற்று முடிந்துள்ளது.

107] Leprosy Case Detection Campaign - LCDC

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் , 20 மாநிலங்களில் , 149 மாவட்டங்களில் செப்டம்பர் 05 முதல் 18 வரை, வீடு வீடாக சென்று தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய " தொழுநோய் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியும் இயக்கத்தை " துவங்கியுள்ளது.

108] இந்தியப் பெருங்கடல் மாநாடு - 2016 (Indian Ocean Conference) செப்டம்பர் 01 மற்றும் 02ல் சிங்கப்பூரில் நடைபெற்று முடிந்துள்ளது.

* ஜிகா வைரஸ் அச்சுருத்தல் காரணமாக, இம்மாநாட்டில் இந்திய வெளியுறவு துறை அமைச்சர் காணொளி காட்சி மூலம் உரையாற்றியுள்ளார்.

109] Biju Gaon Radio -- Apananka Pain (Message For You)

பிரதமர் மோடியை பின்பற்றி ஒடிஷா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் மாதம் ஒருமுறை 10 நிமிடங்கள் வானொலியில் உரையாற்ற உள்ளார்.

110] மிஸ் ஜப்பான் அழகியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரியங்கா யோஷிகாவா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பிரியங்கா யோஷிகாவா இந்திய தந்தைக்கும் ஜப்பானிய தாய்க்கும் டோக்கியோவில் பிறந்தவர்.

111] 2017 as The Year Of Friendship

2017ம் ஆண்டை நட்பறவு ஆண்டாக கடைபிடிக்க இந்தியாவும் வியட்நாமும் ஒப்புக் கொண்டுள்ளன.